தொட்டிகளையெல்லாம் மீண்டும் கட்ட வேண்டுமென்று மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவற்றைக் கணக்கெடுத்து, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியம்மூலம் அவற்றை நல்லமுறையிலே, சிறப்பான முறையிலே கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் எந்தத் திட்டம் புதியதாகத் தொடங்கப்பட்டாலும், ஏற்கெனவே இருக்கின்ற திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தாலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எங்கள் துறையின் சார்பாகத்தான் கட்டப்படும்.* Own source*மூலம் என்று சொல்லப்படுகின்ற,* RD Department *மூலமாக, நகராட்சி அல்லது ஒன்றியம் மூலமாக நடைபெறுகின்ற பணிகளில் அவர்கள்தான் அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் கட்டப்படும் குடிநீர்த் தொட்டிகள் சிறப்பானதாகவும், நல்லமுறையிலும் இருக்கும். ஏற்கெனவே, எங்கள் துறையின் சார்பாகக் கட்டப்பட்ட தொட்டிகள் சரியாக இல்லாமல் இருக்குமானால், அதைப் புதுப்பித்துத் தருவதற்கும் துறை முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜூ, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

கலைக் கல்லூரி

***3707—திரு. கே. ராஜூ:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருபாலர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

2021 செப்டம்பர் 3]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மேற்குத் தொகுதி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் தற்போது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 17 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர 12 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 17 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ, மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மதுரை மாநகர் மேற்குத் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜூ அவர்கள்.*

திரு. கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கல்லூரிகளெல்லாம் ஒட்டுமொத்த மதுரை மாவட்டம் முழுமைக்கும் இருக்கின்றன. மதுரை மேற்குத் தொகுதியில் எந்தக் கல்லூரியும் அமைக்கப்படவில்லை, ஒரு கல்லூரிகூட இல்லை.*

இரண்டாவது, மதுரை மேற்குத் தொகுதியில் 9 ஏக்கர் 67 சென்ட் அரசாங்கப் புறம்போக்கு நிலம் காலியாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனது வைத்து, இன்றைக்கு மதுரையில் ஏற்கெனவே இருக்கின்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளெல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர், சுருக்கமாகப் பேசி, கேள்விக்கு வந்துவிடுங்கள்.*

திரு. கே. ராஜூ: Short *ஆக பேசிவிடுகிறேன். ஏற்கெனவே இருக்கின்ற கல்லூரிகள், 30 ஆண்டுகள், 35 ஆண்டுகள், 40 ஆண்டுகளுக்கு முன்பாகத் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள். இன்றைக்கு மாணவர்களின் சேர்க்கை அதிகமாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து, இன்றைக்கு எல்லா இடங்களிலும், குறிப்பாக, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நிறைய பேர் சேர்கின்றார்கள். எனவே, மாணவர்களின் சேர்க்கை விகிதத்தைக் கருத்தில்*

கொண்டு, கூடுதலாகக் கல்லூரிகளை அமைப்பதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று தெரிந்திருக்கிறது. இந்த முதலமைச்சரிடம் கேட்டால்தான் எந்தக் காலத்திலாவது ஒன்று நடக்கும் என்று தெரிந்திருக்கிறது. ஏனென்றால், 10 வருடங்களாக அவர் அமைச்சராக இருந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 10 வருடங்களாக அமைச்சராக இருந்த அவருடைய தொகுதியில் ஒரு கல்லூரிகூட இல்லை என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அவர் அப்பொழுதே செய்திருக்கலாம், பரவாயில்லை. இப்போது கேட்டதைச் செய்து கொடுக்கின்ற தலைவர் இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒன்று மட்டும் சொல்கிறேன். இங்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கு இடம் இல்லை என்கிறீர்களே, மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற கல்லூரிகளில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 29,189. அவ்வளவு பேரைச் சேர்க்கலாம். ஆனால், சேர்ந்திருப்பது எத்தனை பேர் என்றால், 18,750 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். 10,439 காலியிடங்கள் இருக்கின்றன. ஆக, இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்றன. கல்லூரிகள் அமைப்பதென்பது சாதாரணமான விஷயம் கிடையாது. உங்களுக்கும் தெரியும், நீங்கள் அமைச்சராக இருந்தவர். அப்போது முடிந்திருந்தால், நீங்களே அமைத்திருப்பீர்கள். முடியவில்லை என்பதால் இப்போது கேட்கிறீர்கள். ஆனால், மதுரையை பொறுத்தவரை, கல்வி வளர்ச்சியிலே அதிகம் பெற்றது. இன்னும் ஒன்று சொல்கிறேன். மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் இருக்கிறதல்லவா, அந்தப் பல்கலைக்கழகத்தின் மூலமாகவே ஒரு கல்லூரி நடத்தப்படுகிறது. மதுரை மாவட்டத்திலே இருக்கின்ற நான் சொன்ன அந்த 41 கல்லூரிகள் தவிர, அந்தப் பல்கலைக்கழகம் மட்டுமே ஒரு கல்லூரியை நடத்தி வருகின்றது. அது மாலை நேரக் கல்லூரியாக முதலில் துவங்கப்பட்டு, பிறகு இப்போது முழு நேரக் கல்லூரியாக, அழகர் கோயில் சாலையிலே அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய அந்தக் கல்லூரியும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உங்கள்*

2021 செப்டம்பர் 3]

தொகுதியில், இனி வருங்காலங்களிலே அதுபோன்ற ஒரு சூழ்நிலை வருமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜூ அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 10 ஆண்டுகள் நான் அமைச்சராக இருந்தபோது ஒரு கல்லூரிகூட பெற முடியவில்லையா என்று கேட்டார்கள். நான் அதற்குள் போகக் கூடாது. இருந்தாலும், அந்தக் கல்லூரி குறித்து மட்டுமே பேசுகிறேன். மதுரைக்கு இதுவரைக்கும் எத்தனையோ திட்டங்கள் கடந்த 10 ஆண்டுகளில் கிடைத்திருக்கின்றன. இருப்பினும், கூடுதலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்கிறேன் என்றால்; காலி இடம் இருக்கிறது என்பதால். இன்றைக்கு, பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. 30 ஆண்டுகளுக்கு முன்பாக உயர் கல்வித் துறையில் மாணவர்களின் சேர்க்கை 20 சதவிகிதமாக இருந்தபோது அந்தக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அம்மா அவர்களின் ஆட்சியில், மாணவர்களின் சேர்க்கை 52 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. தற்போது, உங்களுடைய ஆட்சியிலும் உயருகிறது. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், மதுரையில் ஓர் அரசு கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக வைக்கிறேன்.*

இன்னொன்று என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மதுரை காமராஜர் University *சார்பாக அந்தக் கல்லூரி நடத்தப்படுகின்றது என்று சொன்னார்கள். அங்கு 4,335 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். அதில், 32 சதவிகிதம் பட்டியல் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். 50 சதவிகித மாணவர்கள் விவசாயப் பெருங்குடி மக்கள், கிராமப்புறங்களில் வாழும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜூ, கேள்வி குறித்து நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்!*

திரு. கே. ராஜூ: இல்லை, அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அதாவது, கட்டணங்கள் கூடுதலாக இருக்கின்றன. அதிகமான கட்டணங்கள் இருக்கின்றன. அந்த University-யோடு அந்தக் கல்லூரி இருப்பதால், அவர்கள் என்ன கட்டணம் நிர்ணயிக்கின்றார்களோ அதுதான். மதுரையில் ஓர் அரசு கல்லூரிகூட இல்லை. ஆனால், மேலூரில் இருக்கின்றது. இங்கிருந்து 40 கிலோ மீட்டர் தூரம் உள்ள மேலூருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு தெளிவான பதிலைச் சொல்லிவிட்டார்கள். கடந்த 10 வருடங்களாக நீங்கள் கொண்டுவரவில்லை. ஆகவே, நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொல்லிவிட்டார்.

திரு. கே. ராஜூ: அதற்குள் நான் செல்லவில்லை. இந்தக் கல்லூரி சம்பந்தமாக, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. கே. ராஜூ: கேள்விக்குத்தான் வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதால் நான் சொல்கிறேன். மதுரை காமராஜர் University-யோடு இருக்கின்ற அந்தக் கல்லூரியை முதலில் அரசுக் கல்லூரியாக அறிவித்து, அதற்கு அருகில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசுக் கல்லூரியாக அறிவிக்கப்படுமா என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

திரு. கே. ராஜூ: அதை அரசுக் கல்லூரியாக அறிவித்தால், மாணவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய அந்தக் கல்லூரியிலே 13 இளநிலைப் பட்டப் படிப்புகளும், 9 முதுநிலை பட்டப் படிப்புகளும் நடைபெற்று வருகின்றன. ஒரு கல்லூரி பல்கலைக்கழகத்தோடு இருப்பதில் எந்தவிதமான தவறும்

2021 செப்டம்பர் 3]

இருக்க முடியாது. பல்கலைக்கழகத்தினுடைய கல்லூரியாக அது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நீங்கள் அதை அரசுக் கல்லூரியாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்கிறீர்கள். பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக இருந்ததையெல்லாம் மாற்றியிருக்கிறோம். நீங்கள் சொல்லியிருக்கின்ற கோரிக்கை, நான் முதலிலே சொன்னமாதிரி, எங்கு கேட்டால், எந்தக் கதவைத் தட்டினால் கிடைக்கும் என்பதை தெரிந்து வைத்துக்கொண்டு, நீங்கள் அதை தட்டிக் கொண்டிருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக, வருங்காலங்களில், அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உள்ளத்தில் எவ்வளவு நன்றி வைத்திருக்கின்றீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜு, நன்றி மட்டும் சொல்லுங்கள்.*

திரு. கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பல்கலைக்கழகத்தினுடைய அந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்ற பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கொற்கையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் இருந்தபோது கொண்டுவரப்பட்டது. அந்தக் கல்லூரி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்தக் கல்லூரியோடு சேர்த்து, அரசு*

[2021 செப்டம்பர் 3

மாணவர் விடுதியும் கட்டப்பட்டிருக்கின்றது. நீண்டகாலமாக அது செயல்படாமல் இருக்கின்றது. அந்த மாணவர் விடுதி செயல்பாட்டுக்கு வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த மாணவர் விடுதி குறித்து இப்போது இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அங்கிருக்கின்ற விடுதி செயல்படாமல் இருக்குமானால், நிச்சயமாக, அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் நிறைய கல்லூரிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். தனியார் கல்லூரிகளும், சுய நிதிக் கல்லூரிகளும் இருக்கின்றன. அது உண்மைதான். அரசின் சார்பாக மீனாட்சி மகளிர் கலைக் கல்லூரி இருக்கின்றது. இருந்தாலும்கூட, ஏழை, எளிய மாணவர்களின் நலன் கருதி, அரசின் சார்பாக மாணவர்களுக்கான ஒரு கலைக் கல்லூரி துவக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் கல்லூரிகள் துவக்குவது குறித்து நான் முதலிலே பதில் சொல்லிவிட்டேன். இருந்தாலும், அவரும் மதுரைக்காரரர் என்பதால் அதை கேட்கிறார். இவர் மதுரை (வடக்கு) சட்டமன்றத் தொகுதி உறுப்பினர். அவர் மதுரை (மேற்கு) சட்டமன்றத் தொகுதி உறுப்பினர். அதனால் அவரவர்கள் கேட்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆகவே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இதுபோன்ற கோரிக்கைகளைக்

2021 செப்டம்பர் 3]

கொடுத்திருக்கின்றார்கள். இங்கே இருக்கின்ற மந்திரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்று அனைவரும் அரசுக் கல்லூரிகள் வேண்டுமென்று கொடுத்திருக்கின்றார்கள். நிச்சயமாக, வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–20

ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னால், சாதாரணமான விஷயம் கிடையாது. அதிலும் குறிப்பாக, ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவதைப் பொறுத்தவரையில், 34 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப வேண்டும். அதுமட்டுமல்ல, ஊதியம் ஆண்டொன்றிற்கு ரூ.2¼ கோடி கொடுக்க வேண்டும். மேலும், கட்டடங்கள் மற்றும் தளவாடங்களுக்காக ரூ.12 கோடி செலவாகும். இவ்வளவு நிதி தேவைப்படுகிறது. இந்த நிதி நெருக்கடியிலே, 10 கல்லூரிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். நிச்சயமாக வருங்காலங்களிலே உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படும் என்று நான் முதலிலே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

சாலையை மேம்படுத்துதல்

***579—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, மகாதேவபுரம்–கச்சமங்கலம்–மாரனேரி சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, மகாதேவபுரம்–கச்சமங்கலம்–மாரனேரி சாலை 5.2 கிலோ மீட்டர் தூரம்